# வேளாண் வெற்றியாளர்கள் 2022







தொகுப்பாளர்கள்

முனைவர் வெ. கீதாலட்சுமி
முனைவர் பி. பொ. முருகன்
முனைவர் ந. ஆனந்தராஜா
முனைவர் மு. அசோகன்
முனைவர் ம. செந்தில்குமார்

விரிவாக்கக் கல்வி இயக்ககம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் – 641003

21

# புதிய கண்டுபிடிப்பிற்கான விருது பெற்ற (TBI TNAU) வேளாண் பெண் தொழில்முனைவோர்



| | | | |
|---|---|---|---|
| 1. | விவசாயியின் பெயர் மற்றும் முகவரி | : | திருமதி. ஈ. கவிதா<br>188 அனுப்பபர்ளையம்<br>சதுமுகை அஞ்சல், DG புதூர்<br>சத்தியமங்கலம் தாலுக்கா<br>ஈரோடு மாவட்டம் – 638 503 |
| 2. | அலைபேசி மற்றும் தொலைபேசி எண் | : | 63809 98287 |
| 3. | மின்னஞ்சல் | : | kaviaara@gmail.com |



**4. விவசாயியின் விபரம் (நில அளவு, பயிர் சாகுபடி மற்றும் விவசாய வசதிகள்)**

சத்தியமங்கலம் தாலுக்கா அனுப்பர்பாளையம் கிராமத்தில் வசிக்கும் திருமதி.ஈ.கவிதா MBA., பட்டதாரி ஆவார். இவர் 3 எக்கர் பரப்பளவில் ஆற்றுப்பாசன நீராவாரி விவசாய முறையில் கரும்பு மற்றும் வாழை சாகுபடி செய்து வருகிறார்.

**5. தொழில்நுட்ப பயன்பாடு**

- ஒருங்கிணைந்த பண்ணை மேம்பாடு தொழில்நுட்பத்தை கடைபிடித்ததால் இவரின் சாகுபடி செலவு 30 சதவிகிதம் குறைக்கப்பட்டுள்ளது.
- விவசாய விளைபொருட்களில் புதிய தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி அவற்றை மதிப்புக்கூட்டி விற்பனை செய்து வருகிறார் (தென்னை. சிறுதானியங்கள், மஞ்சள், மசாலா பொடி வகைகள் மற்றும் சத்துமாவுகள்).

**6. சாதனையின் விபரம் மற்றும் பயன்கள்**

- ஒருங்கிணைந்த பண்ணை மேம்பாடு முறையில் கீழ்க்காணும் தொழில்நுட்பங்களை அமைத்து அவற்றை சிறந்த வகையில் மேலாண்மை செய்து வருகிறார்.
  - கறவை மாடு - 2
  - கன்றுகள் - 4
  - கோழிகள் - 70 அசீல், கிராமப்பிரியா மற்றும் கிரிராஜா)
  - ஆடுகள் -4
  - நாய்கள் இனப்பெருக்கம்- 6 வகையான இனங்கள்
  - தேனீ பெட்டி - 19
  - பாக்கு நாற்று உற்பத்தி - 300
  - கருப்பு படைப்புழு உற்பத்தி
  - மண்புழு வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் உற்பத்த்தி (புதிய தொழில்நுட்பமான பெட்டி (டிரே) மூலம் வளர்ப்பு)
  - கலப்புத்தீவன உற்பத்தி
- புதிய தொழில்நுட்பத்தின் மூலம் மண்புழு உற்பத்தி மற்றும் மண்புழு உரம் உற்பத்தி செய்து, உள்ளூர் மற்றும் வெளியூர் விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறார்.

- இயற்கை முறையில் விதை நேர்த்தி மற்றும் விதை பூச்சு தொழில்நுட்பங்களை புதிய அணுகுமுறையில் கண்டுபிடித்துள்ளார்.
  - இந்த புதிய தொழில்நுட்பம் விதைகளின் முளைப்புத்திறனை அதிகரிக்க உதவுகிறது.
  - வறட்சியைத் தாங்கி வளர ஊக்குவிக்கிறது.
  - விதை சார்ந்த பூஞ்சாண நோய்களை கட்டுப்படுத்த உதவுகிறது.
  - மண்ணின் உயிரியல் காரணி உற்பத்திக்கு உதவுகிறது.
  - பயிர்களின் துரித வளர்ச்சி மற்றும் அதிக விளைச்சலுக்கு வழிவகுக்கிறது.

7. சாதனையின் பரவலாக்கம் மற்றும் தாக்கம்

- "AARA" என்ற பெயரில் வேளாண் விளைபொருட்கள் மற்றும் மதிப்புக்கூட்டுதல் பொருட்களை நேரடியாக சந்தைப்படுத்தி வருகிறார்.
- சமூக ஊடகங்களின் தொடர்புடன் சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தி வருகிறார்.
- தரமான பொருட்களை உற்பத்தி செய்து பொதுசேவை வரியுடன் ஏற்றுமதி செய்து வருகிறார் (சிங்கபூர்).
- Zee Tamil தொலைக்காட்சியில் அனுபவ பகிர்வு நிகழ்ச்சியில் - ஒருங்கிணைந்த பண்ணையத்தில் சாதனை புரிந்த பெண்மணி என்ற தலைப்பில் பங்கேற்று தமது அனுபவத்தை பகிர்ந்துள்ளார்.
- ஒருங்கிணைந்த பண்ணையம் பற்றி பசுமை விகடன் நாளேட்டில் இவரது அனுபவங்கள் ஆவனப்படுத்தப்பட்டுள்ளது.
- வேளாண் அறிவியல் நிலையம் இவரது பண்ணையை வேளாண் தொழில்முனைவோருக்கான மாதிரி பண்ணையாக தேர்ந்தெடுத்துள்ளது.
- வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் 475 விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்கள் இவரது பண்ணையை பார்வையிட்டுள்ளனர்.
- இவரது பண்ணையை பார்வையிட்ட பிறகு 32 கிராமப்புற பெண்கள் தொழில்முனைவோர்களாக உருவாக்கியுள்ளனர். மேலும், 28 விவசாயிகள் இவரது ஒருங்கிணைந்த பண்ணை மேம்பாட்டு தொழில்நுட்பத்தை மேற்கொண்டு வருகின்றனர்.
- நாட்டுக்கோழி வளர்ப்பில் தாய் கோழி இனப்பெருக்க பண்ணை அமைத்து ARYA & SCSP என்ற திட்டங்களின்கீழ் கிராமப்புற இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் அவர்களது வாழ்வாதாரம் முன்னேறுவதற்கு நாட்டுக்கோழி வளர்ப்பு தொழில்நுட்பங்களை வழங்கி வருகிறார்.
- பண்ணை மகளிர் மேம்பாட்டிற்கு தகுந்த தொழில்நுட்பங்களை வழங்கி அவர்களை தொழில்முனைவோர்களாக ஊக்குவித்து வருகிறார்.
- இயற்கை முறையில் விதைநேர்த்தி மற்றும் விதை பூச்சு தொழிலநுட்பங்களை புதிய அணுகுமுறையில் கண்டுபிடித்ததற்காக RKVY RAFTAAR R ABI Cohort-II திட்டத்தில் நிதி பெற்று Farm Pro Agro என்ற நிறுவனத்தை துவங்கி வேளாண் அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் விதை பூச்சு தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்து வருகிறார்.

8. விருது மற்றும் வயல்வெளி புகைப்படம்

- வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாய விளைபொருட்களில் மதிப்புகூட்டுதல் பயிற்சி வழங்குவதில் முதன்மை பயிற்றுநராக உள்ளார்
- இவரது அனுபவங்கள் பொதிகை தொலைக்காட்சியில் ஆவணப்படுத்தப்பட்டு ஒளிபரப்பப்பட்டுள்ளது.
- 2021 ம் ஆண்டு உலக மகளிர் தினத்தன்று சிறந்த பெண் விவசாயி மற்றும் தொழில்முனைவோர் விருது வேளாண் அறிவியல் நிலையம் வழங்கி கௌவுரவித்துள்ளது.

- 2022 ம் ஆண்டு உலக மகளிர் தினத்தன்று சிறந்த பெண் விவசாயி விருது கோபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி வழங்கி கௌவுரவித்துள்ளது.
- கல்லூரிகள் மற்றும் வேளாண் துறைகளில் நடைபெறும் வேளாண் சார்ந்த பயிற்சிகளுக்கு பயிற்றுநராக சென்று வருகிறார்.
- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கோயம்புத்தூரில் உள்ள Technology Business Incubation (TBI) மையத்தில் உறுப்பினராக உள்ளார். இம்மையத்தில் வேளாண் தொழில்முனைவோர் மேம்பாடு பற்றிய இரண்டு மாத பயிற்சி பெற்றுள்ளார்.
- வேளாண் அறிவியல் நிலையத்தில் ஒரு மாத கால திறன் மேம்பாட்டு பயிற்சிகளான இயற்கைவழி விவசாயம் மற்றும் மண்புழு உற்பத்தி தொழில்நுட்பம் போன்ற பயிற்சிகளில் கலந்து கொண்டு சிறந்த முறையில் இந்த தொழில்நுட்பங்களை பின்பற்றி வருகிறார்.
- வேளாண் இடுபொருள் உற்பத்தியாளர்களுக்கான ஒரு வருட பட்டய படிப்பு முடித்துள்ளார்.
- வேளாண் அறிவியல் நிலையத்தின் விஞ்ஞான ஆலோசனைக் குழுவில் இளம் பெண்-விவசாயி உறுப்பினராக உள்ளார்.
- இயற்கை முறையில் விதை நேர்த்தி மற்றும் விதை பூச்சு தொழில்நுட்பங்களை புதிய அணுகுமுறையில் கண்டுபிடித்தற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள Technology Business Incubation (TBI) மையம் விருது வழங்கியுள்ளது.

## விதை பூச்சு தொழில்நுட்பங்கள்





## ஒருங்கிணைந்த பண்ணைய மேம்பாட்டு தொழில்நுட்பங்கள்



## வேளாண் பொருட்களில் மதிப்புகூட்டுதல்





## விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்




















9. **தொகுப்பு**

- முனைவர் பெ. அழகேசன், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் வேளாண்மை அறிவியல் நிலையம், ஈரோடு மாவட்டம் - 638 453, அலைபேசி: 9443897654.
- திருமதி.M. சிவா, விஞ்ஞானி (மனையியல்)
  வேளாண்மை அறிவியல் நிலையம், ஈரோடு மாவட்டம் - 638 453
  அலைபேசி: 9842748963.